செய்தி வெளியீடு எண்.189 நாள்.11.3.2008

# செய்தி குறிப்பு

பால் கொள்முதல் விலை பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.2.00 மற்றும் எருமைப்பால் லிட்டர் ஒன்றுக்கு ரூ.4.00 என்று உயர்த்தியதன் விளைவாக பால் அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் ஆவின் சமன்படுத்திய பால் விற்பனைவிலையை லிட்டர் ஒன்றுக்கு ரூ.2.00 மட்டும் அரசு உயர்த்தியுள்ளது.

பத்திரிக்கைகளில் பலவாறு அரசின் பால் விலை உயர்வைப்பற்றி செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அரசு அறிவித்த விலை உயர்வான லிட்டர் ஒன்றுக்கு ரூ.2.00 என்பது பால் அட்டை தாரர்களுக்குண்டான சமன்படுத்திய பாலுக்கு மட்டும்தான் என்று இதன் மூலம் நுகர்வோர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. சமன்படுத்திய பாலைத்தவிர, இதர பால் வகைக்களுக்கான விலையை இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியங்களே நடைமுறை வழக்கப்படி நிர்ணயம் செய்கிறது.

கொழுப்புச்சத்து மற்றும் இதர சத்துக்களின் அடிப்படையில் ஆவின் நிறுவனத்தில் சமன்படுத்திய பால், இருநிலை சமன்படுத்திய பால், நிலைப்படுத்திய பால் மற்றும் நிறை கொழுப்பு பால் என்ற நான்குவகை பால் தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. ஆவின் பால், மாதந்தோறும் முன்பணம் செலுத்திப்பெறப்படும் பால் அட்டைகள், ரொக்க பணம் கொடுத்து பெறுதல், பால் விநியோக டிப்போக்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. பல்வேறு வகையான பாலுக்குண்டான விலை உயர்வு விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | விவரம் | கொழுப்பு % | இதர சத்து % | பால் அட்டை மூலம் லிட்டர் ஒன்றுக்கு உயர்வு | ரொக்கத்திற்கு லிட்டர் ஒன்றுக்கு உயர்வு |
|---|---|---|---|---|---|
| 1. | சமன்படுத்திய பால் (TM) | 3.0 | 8.5 | ரூ.2.00 | ரூ.2.50 |
| 2. | நிலைப்படுத்திய பால் (SM) | 4.5 | 8.5 | ரூ.3.00 | ரூ4.00 |
| 3. | நிறைகொழுப்பு பால் (FCM) | 6.0 | 9.0 | ரூ.3.00 | ரூ4.00 |
| 4. | இருநிலை சமன்படுத்திய பால் (DTM) | 1.5 | 9.0 | ரூ.2.50 | ரூ.3.00 |

பால் கொள்முதல் விலையை உயர்த்தியதின் விளைவாக மேற்கண்டவாறு பால் விற்பனை விலையை மாற்றியமைப்பது அவசியமாகிறது. பாலில் உள்ள கொழுப்பு மற்றும் இதர சத்துக்களின் அடிப்படையை கருத்தில் கொண்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

இவ்வாறு விலை உயர்த்தப்பட்ட பின்னும் ஆவின் பால்விற்பனை விலை மற்ற மாநிலங்களைவிட குறைவுதான். உதாரணமாக பால் அட்டைகள் மூலமாக சென்னை மாநகரில் வழங்கப்படும் ஆவின் சமன்படுத்திய பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு ரூ.15.75 தான். அதே சமயம் கேரளாவில் லிட்டர் ஒன்றுக்கு ரூ.19.00 என்றும், ஆந்திராவில் ரூ.18.00 என்றும் டெல்லி மற்றும் கொல்கத்தாவில் ரூ.20.00 என்றும் விற்கப்படுகிறது.

இந்நிலையில் சில மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் தங்களது மாவட்ட சூழ்நிலைக்கேற்ப நிர்ணயத்த விலைகள் இணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலை அளவிலிருந்து சற்று வேறுபட்டுள்ளது. இதன் காரணமாக சில மாவட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் சில வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளது. இது அரசின் கவனத்திற்கு வரபெற்றவுடன், உடனடியாக வேறுபாடுகளை களைந்து பால் வகை, பால் அட்டை மற்றும் ரொக்க விற்பனை என்ற அடிப்படையில் இணையம் நிர்ணயித்துள்ள விலைக்கு மிகாமல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் சரியான விற்பனை விலையை நிர்ணயித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாற்றியமைக்கப்பட்ட விற்பனை விலை விபரங்கள் அந்தந்த மாவட்ட ஒன்றியங்களின் தனி அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பத்திரிக்கைச் செய்தியாக வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

சென்னை மாநகரில் பால்பை மற்றும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் மூலம் வழங்கப்படும் பால் விற்பனை விலை பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பாலின் வகை | பால் அட்டை மூலம் பழையவிலை | பால் அட்டை மூலம் புதிய விலை | அதிகபட்ச சில்லரை விற்பனை பழைய விலை (MRP) | அதிகபட்ச சில்லரை விற்பனை புதிய விலை (MRP) |
|---|---|---|---|---|---|
| 1. | பால்பாக்கெட்<br>சமன்படுத்திய பால் (TM)<br>ஒரு லிட்டர்<br>அரை லிட்டர் | ரூ.13.75<br>ரூ.6.90 | ரூ.15.75<br>ரூ.7.90 | ரூ.15.50<br>ரூ.7.75 | ரூ.18.00<br>ரூ.9.00 |
| 2. | நிலைப்படுத்திய பால் (SM)<br>அரை லிட்டர் | ரூ.8.00 | ரூ.9.50 | ரூ.9.00 | ரூ.11.00 |
| 3. | நிறைகொழுப்பு பால் (FCM)<br>அரை லிட்டர் | ரூ.9.00 | ரூ.10.50 | ரூ.10.00 | ரூ.12.00 |
| 4. | இருமுறை சமன்படுத்திய பால் (DTM)<br>அரை லிட்டர் | ரூ.6.50 | ரூ.7.75 | ரூ.7.50 | ரூ.9.00 |
| 5. | தானியங்கி பால் வழங்கும் நிலையம் (AVM) மற்றும் பிளாஸ்டிக் தொட்டி (FRP) மூலம்<br>நிலைப்படுத்திய பால் (SM)<br>அரை லிட்டர்<br>ஒரு லிட்டர் | ரூ.7.75<br>ரூ.15.50 | ரூ.9.25<br>ரூ.18.50 | ரூ.8.00<br>ரூ.16.00 | ரூ.10.00<br>ரூ.20.00 |

சென்னை பெருநகரத்தைப் பொருத்தவரையில் சமன்படுத்திய பால்தான் அதிகம் விற்கப்படுகிறது. நாளொன்றுக்கு விற்கப்படும் 10.3 இலட்சம் லிட்டர் பாலில் ஏறத்தாழ 6.5 இலட்சம் லிட்டர் சமன்படுத்திய பால் ஆகும். மேலும் இதில் பெரும்பாலான விற்பனை, பால் அட்டைகள் மூலம் விற்கப்படுகிறது. எனவே நிர்ணயிக்கப்பட்ட சமன்படுத்திய பாலின் விலையால் நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர்களிடமிருந்து ஆவின் பால் அதிக விலைக்கு விற்கப்படுவதாக புகார்கள் வந்ததையடுத்து அரசும் ஆவின் நிர்வாகமும் உடனடியாக நடடிவக்கை மேற்கொண்டு ஆவின் பால் சரியான விலைக்கு விற்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. நுகர்வோர்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் அதிகபட்ச சில்லரை விலைக்குமேல் விற்கும் விற்பனையாளர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க சென்னை மாநகர காவல்துறை மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி சென்னை மாநகரில் இன்று 25 சில்லரை விற்பனையாளர்கள் மீது அதிக விலை வசூலித்தமைக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆவின் நிறுவனம் நுகர்வோர்களுக்கு எந்தவித தங்கு தடையின்றி சரியான விலையில் பால் கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. நுகர்வோர்கள் தங்களது புகார் மற்றும் கருத்துக்களை ஆவின் 24 மணிநேர நுகர்வோர் நலன் மற்றும் சேவை பிரிவில் உள்ள 1800 425 3300 என்ற இலவச தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவிக்கலாம்.

லீனா நாயர்,<br>
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்,<br>
கால்நடை பராமரிப்பு, பால்வளம்<br>
மற்றும் மீன்வளத்துறை.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.